JUN 2010
சென்னை - 108.

சுருக்கம்

மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலக கட்டிடங்களின் மீது 'தமிழ் வாழ்க' என்ற சொல் பொறித்த மின் ஒளிப்பலகை நிறுவுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.101 நாள்: 03.06.20.10

படிக்கப்பட்டது :

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிட்ட அறிவிப்பு, நாள் 26.04.10.

* * * * *

ஆணை :

உயர்தனிச் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியானது 'செம்மொழி' என அறிவிக்கப்பட்டு, "உலகத் தமிழ் செம்மொழி மாநாடு" நடைபெற உள்ள நிலையில், கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றாக " அனைத்து உள்ளாட்சி மன்ற கட்டிடங்களின் மீதும் 'தமிழ் வாழ்க' என்ற சொல் ஒளிரும் வண்ணம் நியான் விளக்குகளால் அமைக்கப்பட்ட மின் ஒளிப்பலகைகள் நிறுவப்படும்" என்று 26.04.2010 அன்று அறிவிக்கப்பட்டது.

2. மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக அலுவலக கட்டிடங்களின் மீது 'தமிழ் வாழ்க' என்ற சொல் பொறித்த மின் ஒளிப் பலகையை 12 அடி நீளம், 3 அடி அகலத்திற்கு குறையாததாக, ஒளிரும் எழுத்துக்களை கொண்டதாக பார்வைக்கு நன்றாக தெரியும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும் என்றும், இதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இந்த மின்ஒளிப் பலகைகள் அனைத்தும் உலகத் தமிழ் செம்மொழி மாநாடு நிறைவு பெறும் 27.06.2010 முதல் செயல்பட தக்கவாறு அமைக்கப்பட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையாளர், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள்
(நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக).

ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
செயல் அலுவலர், அனைத்து பேரூராட்சிகள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் மூலமாக)
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை –9.
நகல்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.II) துறை, சென்னை – 9,
இருப்பு கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.